## கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## MCOP.No. 128/2021

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் நாள் வெள்ளிக்கிழமை **ம.சா.1**-ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளர் திரு. ஆர். கண்ணதாசன் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு.பாலமுருகன் | **வட்டம்** | |
| **த.பெ** | | **சமயம்** | |
| **கிராமம்** | | **வயது** | |

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

விபத்தில் இறந்து போனவர் என்னுடைய அப்பா என்றால் சரிதான். விபத்தின் போது என் அப்பாவிற்கு என்ன வயது என்றால் 65. விபத்து எனக்கு மற்றவர்கள் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். விபத்தின் போது என் அப்பா டி.வி.எஸ்.எக்.செல் TN63K6928 இருசக்கர வாகனம் ஓட்டி சென்றார் என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனத்திற்கு யார் பெயரில் ஆர்.சி இருக்கிறது என்றால் என் அப்பா பெயரில் இருக்கிறது. என் அப்பா பெயரில் உள்ள ஆர்.சியை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா டி.வி.எஸ்.எக்.செல் TN63K6928 இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு செய்துள்ளாரா என்றால் காப்பீடு செய்துள்ளார். விபத்தின் போது என் அப்பாவின் டி.வி.எஸ்.எக்.செல் TN63K6928 இருசக்கர வாகனத்தின் காப்பீடை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. என் அப்பா காப்பீடு செய்துள்ள காப்பீடு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் அப்பா இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் வைத்துள்ளாரா என்றால் வைத்திருக்கிறார். என் அப்பாவின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் விபத்தில் தொலைந்துவிட்டது. என் அப்பா எந்த ஆர்.டி.ஓ அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் எடுத்தார் என்றால் சிவகங்கை ஆர்.டி.ஓ அலுவலகம். என்

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.10.24 19:13:09 +0530

அப்பா இருசக்கர வாகனத்தை அவருக்கு பின்னால் ஒருவரை உட்காரா வைத்துக் கொண்டு விபத்தின் போது ஓட்டிச் சென்றால் சரிதான். அவர் கொல்லங்குடியை சேர்ந்த என் அப்பாவின் நண்பர் என்றால் சரிதான். அவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து நடந்த இடத்தை விபத்திற்கு பிறகு நான் போய் பார்த்தேனா என்றால் 20 நிமிடத்தில் போய் பார்த்தேன். அந்த இடம் ஒரு வளைவு என்றால் சரிதான். அந்த ரோடு கிழமேல் ரோடு என்றால் சரிதான். என் அப்பா மேற்கிலிருந்து கிழக்காக சென்றார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வாகனம் கிழக்கிலிருந்து மேற்காக வந்தது என்றால் சரிதான். என் அப்பா கிழக்கு நோக்கி போகும் போது அவருக்கு முன்னால் சென்ற வாகனத்தை முந்தி செல்ல முயன்றார் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் முந்தி செல்லவில்லை. சம்பவயிடம் வளைவான இடம் என்பதால் எதிர்மனுதாரர் வாகனத்தை மெதுவாக ஓட்டி வந்தார் என்றும் அப்போது என் அப்பா அவருக்கு முன்பாக சென்ற வாகனத்தை முந்தி சென்றதால் எதிர்மனுதாரர் வாகனத்தை நிறுத்தி விட்டார்கள் என்றும் என் அப்பா தான் எதிர்மனுதாரர் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. என் அப்பா விவசாயம் மூலம் வருடத்திற்கு மூன்றரை லட்சம் விவசாயம் மூலமும், பால் பண்ணை மூலமும் சம்பாதித்தார். என் அப்பா எத்தனை ஏக்கர் நிலம் வைத்து என்ன விவசாயம் செய்தார் என்றால் மூன்றரை ஏக்கர் நிலம் வைத்து நெல்லும், கோதுமையும் விவசாயம் செய்தார். என் அப்பா எத்தனை பால் மாடுகள் வைத்திருந்தார் என்றால் 2 ஜெர்சி மாடு, 2 நாட்டு மாடு வைத்திருந்தார். பசு மாடுகள் எத்தனை லிட்டர் பால் கரந்தது 4 மாடும் சேர்ந்து 15 அல்லது 20 லிட்டர் ஒரு நாளைக்கு கரக்கும். நான் என் அப்பா பால் மாடுகள் வைத்து பால் கரந்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா பால் கரந்து சொசைட்டியில் ஊற்றுவாறா தனியாக ஊற்றுவாறா என்றால் கடையில் ஊற்றுவார். என் அப்பா விவசாயம் நிலம் வைத்து விவசாயம் செய்தார் என்பதற்கு தனியாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.10.24 19:13:20 +0530

நான் 20 லட்சம் இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்திருக்கிறேன். என் அப்பா சம்பவயிடத்திலேயே இறந்து விட்டாரா என்றால் தெரியாது. என் அப்பாவை மருத்துவமனைக்கு அரசு ஆம்புலன்ஸில் கொண்டு சென்றார்களா என்றால் தனியார் ஆம்புலன்சில் கொண்டு சென்றார்கள். என் அப்பா வயதானவர் என்றும் பிள்ளைகளின் வருமானத்தில் சாப்பிட்டு கொண்டு வீட்டில் இருந்தார் என்றும் அவருக்கு வருமானம் இல்லை என்றும் இழப்பீடு மிகைப்படுத்தி கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து என் அப்பாவின் கவனக்குறைவால் நடந்தது என்றும் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து நடக்கவில்லை என்றும் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

P PARTHASARATHY

Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.10.24 19:13:28 +0530